★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

## மக்கள் சபையைக்காட்டிலும் பள்ளிக்கூடம் பரவாயில்லை?

மக்கள் சபை உறுப்பினர்களைவிட பள்ளிப் பிள்ளைகள் பரவா யில்லையே என்று எண்ணத் தோன்றுகிறது.

மக்கள் சபையில் உறுப்பினர்கள் அமைதியாக உட்கார்ந் திருப்பதில்லையாம். அடிக்கொரு முறை 'அமைதி; சப்தம் செய் யாதீர்கள்,' என்று தலைவர் குரல் கொடுக்க வேண்டியிருக்கிறதாம்!

அதுகூட சேற்று பலன் தரவில்லையாம்! கோபப்பட்டிருக்கி ருர், சபைத் தலைவர்!

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: பங்குனி 23உ வியாழன் (5—4—56) ★ ★ வெளியீடு: பங்குனி 24உ வெள்ளி (6—4—56) [இதழ் 251

# காமராஜ்-சுப்பிரமணியம் அச்சின் தாசர் புத்தி!

## தங்கத்தைத் தவிட்டுக்கு மாற்றுவதா?

## மத்திய மானியத்தைக் கொண்ட பொறியியல் கல்லூரிக்கு மார்க்கமில்லை!

## ஐம்பத்திரண்டு தொழில் நுணுக்கக் கல்விச்சாலையில் ஐந்தே ஐந்துதான் சென்னைக்கு!

### புகழ்வாய்ந்த கிண்டி பொறியியல் கல்லூரிக்குப் புதிய தலைவலி!

### அக்கல்லூரியை மத்திய நிர்வாகத்திற்கு மாற்றும் பேரத்தில் முடிவு

வடநாட்டு மாணவர்களின் முகாமாகும்—'மதராஸ்' மாணவர்கள் வாய்ப்பிழந்துத் தவிப்பர்!

### அதற்குப் பதிலாக புதிய ஒரு கல்லூரி நிறுவப்படும் என ஆசை மொழி

### புதருரு இரு பட்சிகளுக்காகக் கையுந ஒரு பட்சியை வீசி எறிவதா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், இந்தியத் துணைக் கண்டம் முழுதிலும், பதினைன்கிற்கு மேற்பட்ட முதல் தர பொறியியல் கல்லூரிகளை, மத்திய மானியத்தைக் கொண்டுத் திறக்கப்படுவதென இந்தியப் பேரரசு முடிவுகட்டி இருக்கிறது.

அவைகளில், ஒரு கல்லூரியையாவது சென்னையில் திறக்க வேண்டுமே என்ற நல்லெண்ணம், இந்தியப் பேரரசிற்கு ஏற்படவில்லை. அவ்வெண்ணத்தை ஊட்டுவதும், சென்னையில் ஒரு கல்லூரியைப் புதிதாகத் திறப்பதில் வெற்றி பெறுவதும், தம் கடமையாகுமே என்றக் கடமை உணர்ச்சியும், ஆட்சிப் பொறுப்பில் உள்ள காமராசர்—சுப்பிரமணியம் அச்சுக்கு இருப்பதாகக் காணோம்.

இத்துறையில் இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையும், காமராஜ்—சுப்பிரமணியம் அச்சின் அலட்சியமும் கூடித் தரும் வேதனையைக்கூடத் தாங்கிக்கொள்ளலாம் என்ற வகையில், வேறு ஒரு தாங்க முடியாத சோகச் செய்தி தரப்படுகிறது. அச்செய்தியை நோக்கும்போது, இந்த அமைச்சரவை அச்சு இருத்தலைவிட, ஆட்சிப் பொறுப்பில் இருந்து இறத்தலே மேல் எனக் கருதவே தோன்றுகிறது.

கிண்டியில் நடைபெற்றுவரும் முதல்தரமான பொறியியல் கல்லூரியை, தனது நிர்வாகத்தில் ஒப்படைத்துவிட வேண்டும் என்று, சென்ற ஆண்டில், இந்தியப் பேரரசு, சென்னை அரசாங்கத்தைக் கோரியதாம். 'ஒப்படைக்க முடியாது' எனக் கண்டிப்பாகக் கூறுவதற்கு நெஞ்சுரமோ கொள்கைப் பிடிப்போ துளியும் இருக்க முடியாத அளவில் தாசர் புத்தி தலைக்கேறிப் போயிருக்கும் காமராஜ்—சுப்பிரமணியம் அச்சு, கல்லூரியைக் கேட்டவண்ணம் இந்தியப் பேரரசிடம் அடகுவைக்க, சில சலுகைகளையும் நிபந்தனைகளையும் கோரியதாம்!

அந்த நிபந்தனைகளுக்கு, இந்திய அரசாங்கம் அப்பொழுது இணங்கவில்லையாம்! எனவே, கல்லூரி கைமாற்றமும் கைவிடப் பட்டதாம்!

இந்தப் பேரத்தை, சென்ற ஆண்டில், கல்வி அமைச்சர் சென்னை சட்டசபையில் தந்துள்ளார்.

மீண்டும் இப்பொழுது, கிண்டி கல்லூரியை, சில நிபந்தனைகளுடன் இந்தியப் பேரரசின் நிர்வாகத்திற்கு மாற்றிவிடுவது என்ற முடிவிற்கு, காமராசர்—சுப்பிரமணியம் அச்சு வந்துவிட்டதாம்!

இந்த அடகுவைக்கும் பேர முடிவின் பயனாக, இந்திய அரசாங்கத்தின் பொருளுதவியைக் கொண்டு, சென்னையில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி நிறுவப்படுமாம்!

மேற்குறிப்பிட்ட இரண்டு உண்மைகளையும் நிதி அமைச் அறிவிக்கிருர்!

(4-ம் பக்கம் பார்க்க)

### ஆசிரியர்கள் 'அப்பீல்' செய்ய வசதி

சென்னை, ஏப் 4—

தனிப்பட்டவர்களால் நடத்தும் அரசியலார் உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களை வேலையிலிருந்து விலக்குவது பற்றித் தற்போதுள்ள விதிகளுக்குச் சர்க்கார் திருத்தங்கள் பிறப்பித்துள்ளனர்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு உரிமையும், உதவியும் வழங்கும் விதிகளில் அத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. போதிய ஆதாரமின்றி தவருக வேலையிலிருந்து ஆசிரியர் ஒருவர் நீக்கப்பட்டிருந்தால் மீண்டும் அவரை வேலையில் சேர்த்துக் கொள்ளக்கோரி, பள்ளி நிர்வாகத்தினருக்கு எதிராக 'அப்பீல்' செய்வதற்குத் துணை செய்கிறது ஒரு முக்கியத் திருத்தம்.

### வளரும் விஞ்ஞானம்

உலகை எங்குகொண்டு செல்லும்?

அலகாபாத், ஏப். 4—

"விஞ்ஞானம் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. இது உலகை எங்கு கொண்டுபோய் விடும் என எவருக்கும் தெரியாது. ஆனல் இதற்கு விடை ஜோசியர்கள் கூறுவார்கள் என்று சிலர் சொல்லலாம்; ஜோசியர்கள் அபாயகரமானவர்கள்! அவர்களிடம் ஜோசியம் கேட்பதற்குச் செல்கிறவர்கள் அதிக அபாயகரமானவர்கள்!" என்று, பௌதிகக் கழகம் ஒன்றைத் திறந்துவைக்கையில் பிரதமர் நேரு கூறியுள்ளார்.

### 'சமுதாயப் புரட்சி அவ்வளவு எளிதல்ல'

'ஏராளமான இன்னல்களை ஏற்கவேண்டும்'

மற்ற நாடுகளை சுட்டிக்காட்டுகிருர் இந்தியப் பிரதமர்

அலகாபாத், ஏப். 4—

"நாட்டில் சமுதாயப் புரட்சியை உண்டுபண்ண நாம் விரும்புகிறோம்; ஆனல் இது அவ்வளவு எளிதில் நடைபெறக்கூடியதல்ல; இதற்கு நாம் நிறைய இன்னல்களை அனுபவித்தாக வேண்டும்; கஷ்டப்படாமல் எந்த நாடும் முன்னேற்றம் அடையவில்லை,"

என்று பிரதமர் நேரு, கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

## கள்ளக்குறிச்சி தோழர்கள் மீது வழக்கு

### குண்டடிபட்ட தோழர்கள் விடுதலை

2—4—56-ல் சன்னசேவலு உள்ளிட்ட 13 தோழர்கள் உளுந்தூர் பேட்டைக்கு வழக்கிற்காகச் சென்றனர்.

அவர்கள் மீது இ. பி. கோ. 147, 332 பிரிவுகளின்கீழ் குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கறிஞர் தாத்தாச்சாரி தோழர்கள் சார்பில் வாதாடினர்.

நீண்டநேர விசாரணைக்குப் பின் குண்டடிபட்ட இரு தோழர்கள் கண்ணன் (தி.மு.க.), ஆறுமுகம் (தமிழரசுக் கழகம்) மீதிருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மற்ற 11 தோழர்களின் மீதிருந்த வழக்கு 17—3—56-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

3—4—56-ல், மு. பாண்டியன் உள்ளிட்ட 12 தோழர்கள் உளுந்தூர் பேட்டைக்கு வழக்கிற்காகச் சென்றனர்; பகல் 12 மணிக்கு விசாரணை நடைபெற்றது.

அரசாங்கத் தரப்பு சாட்சிகளாக, கள்ளக்குறிச்சி சப்-இன்ஸ்பெக்டர் டி. குப்புசாமி, தலைமை கான்ஸ்டபிள் ஷேக் உசேன், கந்தசாமி முதலியார் (காங்கிரஸ்), டி. கோதண்டம் (திராவிடர் கழகம்), சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஜான் முத்தையா ஆகியோர் விசாரிக்கப் பட்டனர்.

தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் டி. ஏ. தாத்தாச்சாரியும், அரசாங்க தரப்புக்காக கணநாதன் அவர்களும் வாதிட்டனர்.

மீண்டும் வழக்கு 9—4—56க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க. தி.)

### முதலமைச்சரின் மகன் அபராதம் செலுத்தினர்

பம்பாய், ஏப். 4—

ஒரு போலீஸ்காரரையும், சிறை அதிகாரியையும் தாக்கியதாக, மத்திய பிரதேச முதலமைச்சரின் மகன் பகவதி சரண் சுக்லாவுக்கு ஒரு நாள் சிறைத் தண்டனையும், ரூ. 2,000 அபராதமும் விதிக்கப் பட்டது.

சுக்லா சிறைத்தண்டனையை ஏற்கனவே அனுபவித்துவிட்டு, அபராதத் தொகையையும் கட்டிஞராம்.

****************************************

## திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்
★ திராவிடர் நலம் பெறவும்
★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி

பந்தயத் திடலில்

('ரேஸ் கோர்ஸ்' ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

தி. மு. கழக 2-வது

மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்
நாட்டு விடுதலை குறித்து நல்லுரை ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—
ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

திரண்டு வாரீர் தோழர்களே!

—வரவேற்புக் குழு

****************************************

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5-4-'56 வியாழன்


# ஆச்சாரியாரின் புதிய 'வியாசர் விருந்து'!

தும்பை விட்டு வாலைப் பற்றும் போக்கு, அன்பர் இராசகோபாலாச்சாரியார் அவர்களின் அரசியல் நடைமுறையாகிவிட்டது. அவருடைய அரசியல் பொது வாழ்வைப் பிறர் சொல்லக் கேட்டும், சொந்த அனுபவத்தில் கண்டும் உள்ளவர்கள், மேற்குறித்துள்ள முடிவிற்குத்தான் வந்தாக வேண்டும்.

மாகாணப் புனரமைப்பு மசோதாவின் மீது, மேல்சபையில் நடைபெற்ற விவாதத்தில், ஒரு அருமையான விரிவுரையை ஆச்சாரியார் ஆற்றி இருக்கின்றார். ஆயுட்காலம் முழுதும் பலதிறப்பட்ட அரசியல் சிக்கல்கள் அனைத்தையுங் கண்டு, தெளிந்த அறிவும், சிறந்த இராஜதந்திரமும் பெற்றுள்ளவர் என அவரிடம் நன்மதிப்புக்கொண்டிருப்பவர்கள் பாராட்டிக் கூறிக்கொள்வதை மெய்ப்பிக்கும் வகையில், ஆச்சாரியாருடைய சட்டசபை உரை இருக்கவில்லை. அவரைக் குறித்துக் கூறப்பட்டு வரும் புகழுரை அனைத்தும், அவர் மீது கட்டுக்கடங்காப் பற்றுக்கொண்டவர்களின் வெறும் பொருந்தாக் கற்பனையேயாகும் என எள்ளி நகையாடத்தக்க வகையிலேயே, அவர் உரை அமைந்திருக்கிறது என்றுதான் எவரும் துணிந்து கூறுவர்.

தாம் அதிகாரம் இழந்து கிடப்பதை, அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தமக்குரிய இடத்தைத் தாம் பெற முடியாமல் வேண்டுமென்றே சிலர் சதி செய்துவிட்டதாகக் கூறி, அவர் பெரும் மனத்துடிப்புடன் இருப்பதை, தம் உரை மூலம் அவர் வெளிப்படுத்துகிறார்.

தம்முடைய அறிவாற்றலையும்; அரசியல் அனுபவத்தையும் நன்கு அறிந்திருந்தும், எந்த ஒரு விவகாரத்திலும் தம்மை மதித்துத் தம் கருத்தறிய காங்கிரஸ் மேலிடம் தம்மை நெருங்காததற்காக, தமக்கு ஏற்பட்டுள்ளக் கடுப்பையும், அதனடியாகப் பிறந்துள்ள பழிவாங்கிக்கொள்ள வேண்டும் என்றத் துடிப்பையும், அவர் ஆற்றிய உரை பளிங்குபோல் காட்டுகிறது.

வட நாட்டிற்கு எதிராகத் தென்னாட்டில் உருவாகியுள்ள எதிர்ப்புணர்ச்சியை நியாயமானதே எனத் தாம் ஒப்புக்கொள்ளுவதாகக் காட்டி, இங்குள்ள எதிர்ப்பாளர்களின் உள்ளத்தைக் குளிர வைக்க, வடக்கின் பேராதிக்கத்தைத் தாம் தீவிரமாக எதிர்த்துவந்திருப்பதாகத் தற்பெருமை அடித்துக்கொள்ளுகிறார்.

தம்மிடத்திலிருந்த அதிகாரத்தைப் பறித்துக் கொண்டு, தம்மை அரசியல் அமங்கலியாக ஆக்கிவிட்டவர்கள்மீது பழி தீர்த்துக்கொள்ளும் கெடுமதி, எந்த அளவு தமக்குத் தலைக்கேறிவிட்டிருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்ளவும், அவர் வெட்கப்படவில்லை.

தட்சிணப் பிரதேசம் இப்போது இல்லாது போய்விட்டதினால், இந்தியத் துணைக்கண்டத்துக்குப் பேராபத்து வந்துவிட்டதுபோலவும், தம் அறிவுரையைக் கொண்டுதான் அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்ற ஆணவப் போக்கில், ஆச்சாரியார், மேல் சபையில் அங்கலாய்த்து இருக்கிறார்.

தன்னைக் காட்டிலும் அறிவாற்றலில் மிஞ்சியவரோ சமநிலையில் உள்ளவரோ எவரும் இவ்வுலகில் கிடையாது எனத் திட்டவட்டமாக நம்பிக்கிடக்கும் ஒருவரை, அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டும், எதற்கும் அலட்சியப்படுத்தப்பட்டும் வருகின்ற ஒரு நிலை ஏற்படுமானால், ஒருவருக்கு எத்தகைய மன அரிப்பு ஏற்படுமோ அத்தகைய அரிப்பு ஆயிரம் பங்கு சேர்ந்துள்ளது போன்ற ஓர் மனம்படைத்தவர், எவ்வாறு பேசித் தொலைப்பாரோ, அதே தன்மையில்தான் ஆச்சாரியாரின் மேல்சபை விரிவுரை இருக்கிறது.

மனநூல் அறிவுபெற விழைவோருக்கு ஆச்சாரியாரின் சட்டசபை உரை, ஒரு கிடைத்தற்கரிய பெரு நிதியாகும்.

அரசியல் பொது வாழ்வில், தனக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டதாக, நிச்சயமாக நம்பும் எவரும், தனது முதிய பருவத்தில் எவ்வாறு துடிதுடிப்பார், கொந்தளிப்பார், பன்னிப் பன்னிப் பிதற்றுவர் என்ற மகத்தான உண்மையை உணர்த்தக் கூடிய ஒரு அரிய படிப்பினையாகத்தான், ஆச்சாரியாரின் மேல் சபை உரை அமைந்திருக்கிறது. ஆச்சாரியாரின் 'புதிய வியாசர் விருந்து' என இதைக் கூறுவதுதான் மிகமிகப் பொருத்தமானதாகும்.

## மக்கள் விரும்புகிறார்கள்

### மந்திரியோ மறுக்கிறார்

மேல்சபையில் வி. வி. இராமசாமி

"மொழிவழியாக மாநிலங்களை அமைப்பது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டான பிறகு, எவர் மீதும் கசப்பை வளர்ப்பது சரியானதல்ல.

"இன்று ஏதாவது இரண்டு மாநிலங்களை இணைக்கவேண்டும் என்று கூறுவதற்கு எதிர்ப்பு இருக்கிறதென்றால், அதற்குக் காரணம், சிலர் இணைப்பின் மூலமாகத் தங்கள் தலைமைப் பதவிகளைக் காப்பாற்ற நினைப்பதுதான்.

"தமிழ் நாடு என்று பெயரிட வேண்டுமென மக்கள் ஆர்வத்தோடு கோரும்போது, சபைத் தலைவர் அதை ஏற்க மறுப்பது, வருந்தத்தக்கதாகும்"

என்று, தோழர் வி வி. இராமசாமி சென்னை மேல் (சட்ட) சபையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்,

# மின்சார, நீர்ப்பாசனத் திட்டங்களில் 'தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது'

## மக்கள் சபையில் இடித்துரை

### டெல்லியின் 'நொண்டி' சமாதானம்

தென்னிந்திய மாநிலங்களில் நடுத்தரத் திட்டங்களும் சிறு திட்டங்களும், நிறுவப்பட வேண்டும் என்று டில்லி மக்கள் சபையில் தென்னாட்டு உறுப்பினர்கள் பலர் இடித்துரைத்துள்ளனர்.

தண்ணீர்ப் பாசனம், மின்சார இலாகாவின் நிதி ஒதுக்கல் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போதே மேற்கண்டவாறு, உறுப்பினர்கள் வற்புறுத்திப் பேசியுள்ளனர்.

சர்க்காரால் துவக்கப்பட்ட பல நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களில் முன்னேற்றம் அடைந்திருப்பதாக சபையில் பொதுவான வரவேற்பு இருந்தாலும், கிராமங்களில் மின்சார விநியோகத்தில் அபிவிருத்தி ஏற்படாதது குறித்து அதிருப்தியும் பல உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

சென்னையைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினர் என். ஆர். எம். சாமி குறிப்பிட்டதாவது:—

"பின்தங்கிக் கிடக்கிற பகுதிகளில் மின்சார, நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் போதுமான பங்கு இரண்டாவது திட்ட நகல் திட்டத்தில் தரப்படவில்லை. இப்பகுதிகளில் குழாய்க் கிணறுகள் உடனே தோண்டப்படவேண்டும்.

"பின்தங்கிக் கிடக்கிற பகுதிகளில் சென்னையில் உள்ள பாலாற்று நதிப் பகுதியும் ஒன்று. அப்பகுதிகளில் குழாய்க் கிணறுகளோ, அல்லது மின்சார உதவியுடன் நீர்ப்பாசன வசதியோ செய்யப்பட்டால், சுமார் 20,000 ஏகர் நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட முடியும்."

சென்னையைச் சேர்ந்த சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் எஸ். சி. பாலகிருஷ்ணன் குறிப்பிட்டதாவது:—

"சென்னை மாநிலத்திற்கு பெரிய நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் எதற்கும் பணம் தரப்படவில்லை; சென்னை மாநிலம் தொடர்ந்து உணவுப் பற்றாக் குறையில் இருந்து வருகிறது. மின்சார உற்பத்திக்கான குந்தா திட்டம், உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டும்."

"இரண்டாவது திட்டத்தில் குடகில் உள்ள பாராபோல் நீர்விசை மின்சாரத் திட்டம் சேர்க்கப்பட வேண்டும்," என்று சென்னையைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் என். சி தாமோதரன் கேட்டிருக்கிறார்.

"இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டால், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவுமே இல்லாத மலபார் மாவட்டத்தில் 30,000 ஏகருக்கும்' குடகில் 6,000 ஏகருக்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்கும்படி செய்ய முடியும். இத்திட்டத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் இருக்க, இரண்டாவது. திட்டத்தில் குந்தா திட்டத்திற்கு மட்டுமே சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது திட்டக் குழுவிடம் சென்னையின் வற்புறுத்தலினால் செய்யப்பட்ட ஒன்றுதான்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனிடையில், துங்கபத்திரா நதித் தண்ணீரை உபயோகிப்பது குறித்து பாராளு மன்றச் செயலாளர் ஜெய சுக்லால்ஹாதி என்பார் பேசுகையில், அப்பிரச்சினையில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றத்தில் தமக்குத் திருப்தி இல்லையென்றும், குடியானவர்களுக்குக் கடன் வசதிகள் தந்து, அத் தண்ணீரை உபயோகித்துத் தகுந்த திட்டங்களும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும், துங்கப்பத்திரா திட்டத் தொழிற்சாலையை, இரும்பு எஃகுத் தொழில் இலாகா மேற்கொள்ள வேண்டும் என்றும், இத் திட்டத்தை நீர் பாசன, மின்சார, இலாகா ஆட்சேபிக்கக் கூடாதென்றும் கூறியிருக்கிறார்.

தங்களது மாநிலம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று சென்னை மாநில உறுப்பினர்கள் செய்த புகார் பற்றி அவர் மேலும் பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 23 கோடி பெறுமான குந்தா திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், இரண்டாவது திட்டத்தில் தங்கள் தங்கள் பகுதிகளின் முன்னேற்றத்திற்கென, நீர்பாசன, மின்சாரத் திட்டங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்ற உறுப்பினர்களது கோரிக்கைகள் குறித்துப் பேசுகையில், அவர்களுடைய ஆவலில் தமக்கும் பங்கு இருப்பதாகக் கூறிவிட்டு, இந்திய சர்க்கார், வட்டார ரீதியாக அத்துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியையும், நாடு முழுமையிலுமுள்ள எல்லா இடங்களுக்கும் நியாயமாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் கண்டறிய இருக்கிறது என்றும், என்றாலும், இரண்டாவது திட்டத்தில் இப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஓரளவு வரையறைகள் இருக்கின்றன என்றும், தொழில் நுணுக்கத்திலோ, அல்லது பொருளாதாரத்திலோ அதிக முக்கியத்துவம் இல்லாத சில திட்டங்கள், இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்பட மாட்டாதென்றும் கூறியிருக்கிறார்.

விவாத இறுதியில், பதிலளித்துப் பேசிய அமைச்சர் நந்தா, கிராமங்களில் மின்சாரப் பெருக்கத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமக்கு திருப்தி இல்லையென்றும், எனினும் கிராம மின்சார வசதித் திட்டத்தில் பல தொல்லைகளும் கஷ்டங்களும் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமங்களில் மின்சார வசதி செய்வதால் வருமானம் ஏதும் இல்லை யென்றும், அவ்வேற்பாட்டால். சர்க்காருக்கு வருமானம் தரக்கூடிய வகையில் மேற்கொள்ள வேண்டிய ஒரு கருத்தை சர்க்கார் ஆலோசித்து வருகிறதென்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடு முழுமையிலும் ரூ. 890 கோடி பெறுமான நீர்ப்பாசன, மின்சார திட்டங்கள் இருக்கின்றன. இத் திட்டங்களினால் 1,20,00,000 ஏகர் நிலம் பெரிய திட்டங்களினாலும், 90,00,000 ஏகர் நிலம் சிறு திட்டங்களினாலும் சாகுபடிக்குக் கொண்டுவரப்படும்"

என்ற தகவலையும் அவர் தந்திருக்கிறார்.

# 'புள்ளி விபரங்கள் தர சர்க்காரால் இயலவில்லை'

## அந்தோணி பிள்ளை குற்றச்சாட்டு

"மக்களின் வருமானம் அதிகரித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்; ஆனால் அது குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிக்க சர்க்காரிடம் ஏற்பாடு எதுவும் இல்லை. தேசிய வருமானம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது; ஆனால், அதனால் மக்கள் பெற்ற பலன் என்னவென்பதையும் அறிய வாய்ப்பில்லை.

"தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயித்துத்தருவது, இந்த மாநில சர்க்காரின் அதிகார வரம்பிற்குட்பட்டதுதான்; ஆனால் நகர்ப்புற தொழிலாளர்களுக்கும், கிராமப் புற விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச சம்பள நிர்ணயத்தில் இந்த சர்க்காரின் சாதனை ஏதும் இல்லை,"

என்று, தோழர் எஸ். சி. சி. அந்தோணி (பிள்ளை) சென்னை சட்டசபையில் இரண்டாம் திட்ட விவாதத்தின்மீது பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

## 'தமிழ் நாடு' என்று ஏன் பெயரிடக்கூடாது?

### கஜபதியின் கேள்வி

"நிர்வாக மொழியாக—வட்டார மொழியாக்கப் படும்போதுதான், நிர்வாகம் திறம்பட நடைபெற இயலும்.

"மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைப்பது என்று ஏற்கனவே கொண்ட கொள்கையைவிட்டு இன்று விலகுவது ஏனோ தெரியவில்லை?

"சென்னை மாகாணத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடக் கூடாது என்பதற்கு எந்தவிதக் காரணமும் நியாயமானதாக எனக்குத் தெரியவில்லை.

"'தமிழ் நாடு' என்று பெயரிடுவதுதான், தமிழ் மொழிக்கு நாம் காட்டும் மரியாதையாகும்.

"மேலும் சென்னை என்ற பெயருக்கு வடநாட்டவர் எந்தவித மதிப்பும் தருவதாக இல்லை.

"தமிழ் பேசுபவர்களைப் பெரும் பகுதியாகக் கொண்ட பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கு எந்தவித ஆட்சேபமும் கிளப்புவது நல்லதல்ல; அந்த வகையில், தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழ் நாட்டுடன் இணைய வேண்டுமென நாம் கோருவதற்கு உரிமை உண்டு. ஏனெனில், தமிழ் நாட்டுடன் சேரவேண்டுமென, அந்தப் பகுதி மக்களே முதன் முதலில் குரல் எழுப்பியவர்கள்."

என்று, தோழர் ஏ. கஜபதி (நாயக்கர்) மேல் (சட்ட) சபையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

## கோவா வேண்டுமென பாகிஸ்தான் கேட்காது!

கராச்சி, ஏப். 4—

"கோவா தனக்கு வேண்டுமென பாகிஸ்தான் கேட்டதில்லை; கேட்கவேண்டுமென்ற எண்ணம் என்றும் இருந்ததில்லை,"

என்று, பத்திரிகையாளரிடம் பேசும்போது, பாகிஸ்தான் வெளி விவகார இலாகா செயலாளர் எஸ். ஏ. பெய்க் கூறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமர் பண்டித நேரு, பாகிஸ்தானுக்கு, கோவா மீது 'ஆசை' இருப்பதாகத் தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கும் முகத்தான் இந்தக் கருத்தை பாகிஸ்தான் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

# வளர்ச்சிபெற்ற வட நாட்டில் வளந் தரும் திட்டம்

## ரூ. 120 கோடி செலவில் உருக்குத் தொழிற்சாலை

## 10,000 பேர் பணியாற்றும் வாய்ப்பு பெறுவர்

## துணைத் தொழில்களும் ஏற்படுத்தத் திட்டங்கள் தீட்டப்படும்

*நவீன வசதிகளுடன் தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்*

### ரூர்கேலாவின் முக்கிய அம்சங்கள் விளக்கம்

ரூர்கேலாவில் ரூ. 120 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் உருக்குத் தொழிற்சாலை, தற்போது இந்தியாவில் உள்ள விற்பனை விலைகளின் அடிப்படையில் மொத்தம் சுமார் ரூ. 50 கோடி பெறுமானமுள்ள உருக்கை உற்பத்தி செய்துவருமென்று மத்திய இரும்பு—உருக்கு இலாகா செயலாளர், வானொலியில் பேசுகையில் கூறியுள்ளார்.

உருக்குத் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் பெரும் அளவில் தேவைப்படும். சுமார் 20 இலட்சம் டன் இரும்புத் தாதுவும், 5,00,000 டன் சுண்ணும்புக் கற்களும், 1,50,000 டன் 'மாங்கனீஸ்' கனியும் வேண்டியிருக்கும். இவை தவிர, 16 இலட்சம் டன் நிலக்கரியும் தேவைப்படும். எனவே, நிலக்கரியும், மற்றும், இதர மூலப் பொருட்களும் அருகாமையில் கிடைக்கும் இடம்தான் தொழிற்சாலையை அமைப்பதற்கு மிகவும் ஏற்றதாக இருக்கும்.

ரூர்கேலாவுக்குத் தெற்கே 50 மைல் தூரத்தில் உள்ள 'தால்தீஹ்' எனுமிடத்தில் உயர்ரக இரும்புத் தாதுப் படிவங்கள் பெரும் அளவில் உள்ளன. இந்தப் பகுதி இப்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதியை ரூர்கேலாவுடன் இணைப்பதற்கான இரயில் பாதையொன்றை அமைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுண்ணும்புக் கற்களும், 'மாங்கனீஸ்' கனியும், அருகாமையிலேயே கிடைக்கின்றன. ஆனால், நிலக்கரியைப் பொறுத்தமட்டில்தான் 150 மைல் தூரத்தில் உள்ள 'பொக்காரோ விலிருந்தோ அல்லது 200 மைல் தூரத்திலுள்ள ஜாரியாவிலிருந்தோ 16 இலட்சம் டன் நிலக்கரியைக் கொண்டுவர வேண்டியிருக்கும். 26 இலட்சம் டன் இரும்புத் தாதுவும், சுண்ணும்புக் கற்களும், மிகவும் அண்மையிலேயே கிடைப்பதைப் பார்க்கையில் மேற்கொண்ட சங்கடம் அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை.

உற்பத்தி வேலை துவங்கின பின்னர் தொழிற்சாலைக்கும், தொழிற்சாலை நகரத்திற்கும், நாள்தோறும் மொத்தம் சுமார் 7 கோடி 'காலன்' தண்ணீர் தேவையாக இருக்கும்.

மூலப் பொருட்களையும், தண்ணீரையும் தவிர மின்சார சக்தியும் அதிகம் தேவைப்படும் மின்சார சக்தியில் பெரும் பகுதி, தொழிற்சாலைக்குள்ளேயே மின்சார நிலையமொன்றில் உற்பத்தி செய்யப்பட்டு வரும். இந்த மின்சார நிலையம் இரண்டு வகையில் பயன்பட்டு வரும். அவசர காலத்தில் அதிகமான மின்சாரத்தைத் தருவதற்கும், தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உபரியான வாயுப் பொருட்களையும், 'கோக்' கரி வாயுவையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் அது பயன்படும்.

எனவே, தொழில் நுட்பக் காரணங்களையும், பொருளாதாரக் காரணங்களையும் ஒட்டியே ரூர்கேலா, தொழிற்சாலை நிறுவும் இடமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை இடத்திற்கும், புதிய நகரத்தை நிர்மாணிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பிரதேசத்துக்குமிடையே, கிழக்கிலிருந்து மேற்குமுகமாகச் செல்லும், சுமார் 200 அடியிலிருந்து 300 அடி வரை உயரமுள்ள குன்றுத் தொடர் ஒன்று அமைந்துள்ளது. நகர அமைப்பிற்காக மொத்தம் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவுள்ள பிரதேசம் 'ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதில் இப்பொழுது 4,000 ஏக்கர் பிரதேசம் உடனடியாக அபிவிருத்தி செய்யப்படும். மீதியுள்ளவை நகரத்தின் வருங்கால வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும்.

நகரத்தின் நிர்மாண வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே சுமார் 200 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மின்சார வசதி, குடிநீர் வசதி, நவீன சுகாதார வசதிகள், எரி வாயு 'சப்ளை' ஆகியவற்றுடன் கூடிய சுத்தமான, வாழ்க்கைக்கேற்ற விசாலமான அறைகள் கொண்ட வீடுகளை தொழிலாளர்களுக்கு அளிக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வருட இறுதிக்குள்ளாக வெளிநாடுகளிலிருந்து இயந்திர சாதனங்கள் வந்திறங்க ஆரம்பிக்கும்.

தொழிற்சாலையில், மொத்தம் 75,000 'கிலோவாட்' மின்சாரம் சக்தி உற்பத்தி செய்யவல்லதொரு பெரிய அனல் மின்சார உற்பத்தி நிலையமொன்று அமைக்கப்படும். அதைத் தவிர ஹிராகுட் மின்சாரத் திட்டத்திலிருந்து தொழிற்சாலைக்கு 60,000 'கிலோவாட்' வரை மின்சார சக்தி கிடைக்கும். இரண்டாவது முக்கியப் பகுதி, மூன்று 'கோக்' உலையடுக்குகளைக் கொண்டதாக இருக்கும். இவற்றில், நிலக்கரியிலிருந்து ஆவிப் பொருட்கள் அகற்றப்பட்டு உருக்கு உலைகளுக்குப் பயன்படக்கூடிய 'கோக்' கரியாக அவை மாற்றப்படும். அதன் பயனுக வெளிப்படும் வாயுப் பொருட்கள், உப-பொருட்கள் உற்பத்தி சாதனத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கு 'தார்', 'அம்மோனியா', 'பென்சால்', 'நாப்தலீன்' போன்ற பொருட்கள் பிரித்தெடுக்கப்படும். மீதியுள்ள 'கோக்' உலை வாயு உருக்கு உற்பத்தி சாதனத்திலேயே எரிபொருளாக பயன்படுத்தப்பட்டு வரும்.

மூன்றும் முக்கியப் பகுதி, 'பிளாஸ்ட் பர்னேஸ்'கள் கொண்டதாக இருக்கும். இவ்வுலைகள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்கு 3,00,000 டன் வீதம் தேனிரும்பு உற்பத்தி செய்யவல்லதாக இருக்கும்.

அடுத்த முக்கியப் பகுதி உருக்குக் காய்ச்சப்படும் பிரிவுகளாகும். இங்கு இரும்புத் தாது சுத்திகரிக்கப்பட்டு, தேவையான விகிதாசார முள்ள உருக்காக மாற்றியமைக்கப்படும். உருக்கு உற்பத்தியில் முக்கால் பங்கு, புதிய செய்முறையொன்றின்படி தயாரிக்கப்படும்.

பெரிய உருக்குத் தொழிற்சாலையைச் சுற்றி பல துணைத் தொழில்களும், உப தொழில்களும் ஏற்படுவதை எங்கும் காணலாம். ரூர்கேலாவைப் பொருத்தமட்டில் அப்படியே ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். அத்தகைய தொரு தொழில், வெடி உலைகளிலிருந்து கிடைக்கும் கழிவுக் குழம்பிலிருந்து சிமிட்டி தயாரிக்கும் தொழிற்சாலையாகும்.

இத் தொழிற்சாலையில் மொத்தம் சுமார் ரூ. 120 கோடி முதலீடு செய்யப்பட்டபோதிலும், தொழிற்சாலையில் நேரடியாகக் கிடைக்கும் வேலை வாய்ப்பு அவ்வளவு அதிகமாக இருக்காது. ஏனெனில் அதன் வேலையாட்களில் பெரும் பகுதியினர் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதில் மொத்தம் சுமார் 10,000 பேர் நேரடியாக வேலையில் ஈடுபடுத்தப்படுவார்கள். நாட்டில் வேலையளிப்பு வாய்ப்பைப் பெருக்குவதற்குத் தொழிற்சாலையின் மூலம் கிடைக்கும் பலனை அதைக் கொண்டு மாத்திரமே மதிப்பிட்டு விடக்கூடாது. உருக்குத் தொழிற்சாலைகள் நுட்பச் செய்முறைக்குப் பயிற்சிக்கூடமாக இருப்பதுடன், வேறு இதர தொழித்துறை வேலை நடவடிக்கைகளுக்கும் மூலதார சக்தியாகும். இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் இலட்சக்கணக்கான டன் உருக்கைப் பயன்படுத்துவதில்தான், நாடு முழுவதும் பலதரப்பட்ட வேலைவாய்ப்புக்கள் ஏற்படக்கூடும். மற்றும் இங்கு உற்பத்தியாகும் உருக்கு எவ்வளவுக்கெவ்வளவு மலிவாகவும், சிறந்ததாகவும் கிடைக்கிறதோ அவ்வளவுக்கு தொழில் பெருக்கத்துக்கு அது வழிகோலும்.

இங்கு உற்பத்தியாகும் உருக்கின் மொத்த மதிப்பு இந்தியாவில் தற்போதுள்ள விற்பனை விலை நிலவரங்களின்படி மொத்தம் சுமார் ரூ 50 கோடி இருக்கும் என்று கூறலாம். சர்வதேச விலை அடிப்படையில் அது இன்னும் அதிகமாகவே இருக்கும். தொழிற்சாலையின் 'ரிசர்வ்' தொகைகளும், இலாபத் தொகைகளும், உருக்குத் தொழிலின் முன்னேற்றத்திற்கே முழுவதும் பயன்படுத்தப்பட்டால், சமூகத்துக்கு இனிமேல் எச்செலவுமின்றி, ஒவ்வொரு பத்து ஆண்டு காலத்துக்கும் ஒரு புதிய உருக்குத் தொழிற்சாலை வீதம் நிர்மாணித்து வருவது இயலுவதொன்றாகும்.

---

## நங்கல் திட்டம்

*பிரிட்டிஷ் நிறுவனம் அறிக்கை தரும்*

புதுடில்லி, ஏப். 3—

நங்கல் திட்டம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை தருமாறு, நாஸ்டன் ஜான்பிரௌன் என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தைக் கேட்டிருப்பதாகப் பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிறுவனத்தார், டெல்லி சர்க்காரின், ஆலோசகர்கள் மூவருள் ஒருவராவர்.

நங்கலில் நிறுவப்பட்டுள்ள உர உற்பத்தித் தொழிற்சாலை சுமார் 70,000 டன் உரம் உற்பத்தி செய்யும், மற்றும், உபப் பொருளாக தொழிற்சாலை கனநீர் உற்பத்தியும் செய்யும் என்றும் நேரு தெரிவித்தாராம்.

1960-ல், இந்த உர உற்பத்தித் தொழிற்சாலை உருப்பெறும் என்று தெரியவருகிறது.

---

## மகளிர் 'மறுவாழ்வு' பெறத் திட்டம்

*சீரமைப்பு விடுதிகள் ஏற்படுத்த முயற்சி*

கணிகையர்கள், ஒழுக்கம் தவறிய பெண்கள், ஆகியோரின் மறுவாழ்வுக்கு மத்திய சமூக நல 'போர்டு' திட்டங்கள் வகுத்துள்ளது.

மத்திய போர்டின் சமூக ஒழுக்கத் திட்டங்களுக்காக இந்திய சர்க்கார் உள்விவகார இலாகாவின் வரவு-செலவுக் கணக்கில் ரூ. 45 இலட்சம் இவ்வருடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநில சர்க்கார்களுக்கு இத்திட்டம் பற்றியும், நிதி ஒதுக்கல் பற்றியும் அறிவிக்கப்பட்டு, அவர்கள் கருத்தும் கோரப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 80 சீரமைப்பு விடுதிகளும், 330 மாவட்ட பராமரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்படும். எனவே, திட்டத்தின் கால அளவுக்குள் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளாவது அவையெல்லாம் பணியாற்றும்.

---

## டாடாவிற்கு ஓடோடி உதவும் டெல்லி சர்க்கார்

## தென்னுட்டிற்கு ஏன் உதவக்கூடாது?

*சென்னை சட்டசபையில் கேள்வி*

"சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை துவங்குவது, நெய்வேலி நிலக்கரித் தோண்டுவதை நம்பிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

"டாடா கம்பெனியாருக்கு, உருக்கு உற்பத்தியை அதிகரிப்பதற்காக உறுதிமொழியும், ஆதரவும் தர ஓடோடிச் செல்லும் டெல்லி சர்க்கார், தென்னுட்டில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதற்கு நிலக்கரி எவ்வளவுதான் விலையானதாயிருப்பினும் பெற்றுத் தரும் உதவி செய்ய முன்வர வேண்டும்,"

என்று, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து, சென்னை சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தின்போது தோழர் எம். பழனியாண்டி (சுயேச்சை) குறிப்பிட்டிருக்கிறார்.

---

## திராவிட நாடு கோரிக்கை

*தாழ்த்தப்பட்டோர் தலைவர் கருத்து*

"தொழில் மயமாக்குவதில் தொடர்ந்து டில்லி சர்க்கார், தென்னுட்டை அலட்சியப் படுத்துவார்களேயானால், சுதந்திர திராவிட நாடு கோரிக்கை மேலும் வலுப்பெறும் என்று கூற விரும்புகிறேன்,"

என்று, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தைச் சேர்ந்த தோழர் ஏ. இரத்தினம், சட்டசபையில், இரண்டாம் திட்ட விவாதத்தின் போது குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்தம் 28,631 மைல் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டன வென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## குடும்பக் கட்டுப்பாடு

**முறைகள் பற்றி விளக்க ஏராளமான நிலையங்கள்!**

குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி மக்களுக்குப் போதிப்பதற்காக 136 குடும்பக் கட்டுப்பாட்டு 'கிளினிக்'குகள் இந்தியாவில் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்!

முதல் திட்டக் காலத்தில், மாநில சர்க்கார்களுக்கும், உள்ளாட்சிக் கழகங்களுக்கும், சுயேச்சை நிறுவனங்களுக்கும் இந்நிலையங்களை நிர்வகிப்பதற்காக ரூ. 20,27,630 உதவி மானியமாக வழங்கப்பட்டிருக்கிறதாம்!

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்காக இரண்டாவது திட்ட காலத்தில் ரூ. 4 கோடி ஒதுக்கப்படும்; 300 நகர நிலையங்களும், 2,000 கிராமாந்தர நிலையங்களும் (கிளினிக்குகள்) ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# கழகச் செய்திகள்

### ஆலந்தூர் தி. மு. கழகம்

31—3—56 இரவு 10 மணியளவில், கழகப் பணிமனையில், கழகச் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் தோழர் மு. தங்கவேலர் தலைமையில் நடைபெற்றபோது 1955 அக்டோபர் முதல் 1956 மார்ச் வரையுள்ள வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டும், கழகத்திற்கேற்பட்ட கடனைத் தீர்க்க திரைப்படம் ஓட்டியோ அல்லது சிறப்புச் சொற்பொழிவு நடத்தியோ நிதி திரட்டுவதென்றும், செயற் குழு உறுப்பினர் தோழர் இராதாகிருஷ்ணன், பொருளாளர் துரை-சிவப்பிரகாசம் ஆகியோரது விலகல் கடிதங்களை ஏற்றுக்கொண்டும், தோழர் ப. திருநாவுக்கரசு அவர்களை 1—4—56 முதல் தற்காலிக பொருளாளராகத் தேர்ந்தெடுத்தும், மே தின விழாக் கூட்டத்தைச் சிறப்பான முறையில் நடத்துவதெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### குனியமுத்தூர் தி. மு. க.

1—4—56 இரவு 7 மணிக்கு; கழகப் பணிமனையில், கழக உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

தோழர் தங்கமாணிக்கம் செயலாளராகவும், தோழர் கி. இராமசாமி துணைச்செயலாளராகவும், தோழர் க. இராமு பொருளாளராகவும், ஏழு பேர் செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### வேலகவுண்டம்பட்டி தி. மு. க. பொதுக்கூட்டம்

22—3—56 இரவு 7 மணியளவில், சேலம் மாவட்டம் வேலகவுண்டம்பட்டி சந்தைப்பேட்டை திடலில், தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, சிற்றுனி-சுப்பிரமணியம் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், இன்றைய அரசியல் நிலை குறித்தும், பிப். 20-ல் நடந்த அர்த்தாலின்போது, தம்மம்பட்டியில் நடைபெற்றதைக் கண்டித்தும் பேசினர்.

### பொன்மலை — மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

27—3—56ல், கழகப் பணிமனையில், கழக உறுப்பினர் கூட்டம் தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்றபோது, 23—11—55 முதல் 15—3—56க் தேதி முடிய உள்ள வரவு செலவுக் கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், கழக ஆண்டு விழாவை ஏப்ரல் 3-வது வாரத்தில் நடத்துவதென்றும், அதுபோது பிரச்சார நாடகம் ஒன்றும் நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பாங்கி ஊழியர் போராட்டம் வெற்றி

கோரிக்கைக்கு சர்க்கார் பணிவு

பாங்கி ஊழியர்கள், தாங்கள் இப்போது பெற்றுவரும் ஊதியத்தைப் புதிய சம்பள விகிதங்களைக் காரணமாகக் காட்டி குறைக்கக் கூடாதெனக் கோரி நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

'ஊழியர்களின் சம்பளத்தை வெட்டக்கூடாது,' என்று, பாங்கி நிர்வாகிகளுக்குச் சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

இப்போது ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பளத்தை புதிய விகிதத்திற்கு ஒப்ப குறைப்பதற்கு மாறாக, எதிர்காலத்தில் ஊழியர்கள் ஆண்டுதோறும் பெறக்கூடிய சம்பள உயர்விலிருந்து பிடித்துக் கொள்ளுமாறு பாங்கிகளுக்குச் சர்க்கார் கட்டளையிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த நடைமுறைக்கு பாங்கி ஊழியர் சங்கம் ஏற்கனவே ஒப்புதல் தந்திருக்கிறது என்பதால், ஊழியர் தம் கோரிக்கை நிறைவேறுவதாகக் கொள்ளலாம்

## பரிசீலனையில் இருக்கிறதாம்!

சென்னை மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் போதனு மொழியை மாற்றுவது குறித்த தீர்மானம் இன்னும் சர்க்காரின் பரிசீலனையில் இருந்துவருவதாக சட்டசபை கேள்வி நேரத்தில் கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

★★★-★★★★-★★★★★★★★★★★

மாநில மாநாடு அறிவிப்பு

## தொண்டர்களுக்கு அறிவிப்பு

★

திருச்சியில் நடைபெறும் 2-வது மாநில மாநாட்டில் தொண்டராகப் பணியாற்ற விரும்பும் தோழர்கள் (திருச்சி நகரத்தில் உள்ளவர்கள் மட்டும்) கிளைக் கழகச் செயலாளர் சிபாரிசுடன் மாநில மாநாட்டு அலுவலகத்தில் நேரடியாக தங்கள் பெயரை 10—4—56-க்குள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

—வரவேற்புக் குழு.

★★★★★ ★★★★★★★★ ★★★★★

## அண்ணா படத் திறப்பு

திருப்பத்தூர் (வ. ஆ.) வட்டம் குரும்பேரி கிராம ஊராண்மைக் கழகத்தில் அண்ணா அவர்களின் உருவப் படத்தை, தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கொண்டு, திறந்துவைப்பது என்று ஒருமனதான தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளதாக ஊராண்மைக் கழகத் தலைவரான தோழர் மா. மாரப்பன் அறிவிக்கிறார்.

### சொற்பயிற்சிக் கூட்டம்

6—4—56 மாலை 6½ மணிக்கு சென்னை—1, சாலை விநாயகர் கோவில் தெரு, எண் 17, முத்தமிழ் மன்ற பணிமனையில் தோழர் மு பெருமாள் தலைமையில் 'சொல்லும் செயலும்' எனும் பொருள்பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

## 'தீச்சுடர்' நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு

★

8—4—56 ஞாயிறு காலை 9 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்.

திரைப்பட பின்னணி இசைச் செல்வி திருமதி டி. வி. இரத்தினம் இசை விருந்தளிப்பார்.

தோழர் சி. பி. சிற்றரசு —'புத்தர் புன்னகை'

தோழர் கண்ணதாசன் —'இலக்கியத்தில் காதல்';

தோழர் டி. கே. சீனிவாசன் —'மாஸ்கோ பாதையில் நாம்'

என்ற தலைப்புகளில், சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

நன்கொடை அணா 8

## கழகக் கூட்டம்

★

தஞ்சை:
திலகர் திடலில்
7—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
ஆர். ஜேம்ஸ்

பேசுவோர்:
மு. கருணாநிதி
என். எஸ். இளங்கோ

## மாநிலப் புது அமைப்பு மசோதா

காங்கிரசார் திருத்தத்துடன் மத்திய பிரதேச சட்டசபை அங்கீகாரம்

நாகபுரி, ஏப் 3—

மத்திய பிரதேச சட்டசபை, முதன் மந்திரி பண்டித சுக்லா கொண்டுவந்த மாநிலப் புது அமைப்பு மசோதா பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

மசோதாவில் கண்டுள்ள புது அமைப்பு விவகாரங்களை ஏற்றுக் கொள்வதாகவும், மக்கள் சபையில் மசோதா தாக்கலாவதை வரவேற்பதாகவும் தீர்மானம் கூறுகிறது.

மதன்கோபால் அகர்வால் என்ற காங்கிரஸ் உறுப்பினர் கொண்டுவந்த திருத்தமும் நிறைவேறியுள்ளது.

"புதிய மராட்டிய சட்டசபையின் உறுப்பினர் பலம் 240 என்பதிலிருந்து 320 ஆக உயர்த்தப் படவேண்டும்; ஏனெனில், அப்போதுதான் விதர்ப்பம், மராத்வாடா, மராட்டியப் பிரதேசங்களின் சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கை, மக்கள் சபை உறுப்பினர் எண்ணிக்கையும், 8 : 1 என்ற விகிதத்தில் இருக்க முடியும்."

இதுதான், அந்த காங்கிரஸ் உறுப்பினர் கொண்டுவந்த திருத்தம்.

---

இந்தியாவில் தற்போது மொத்தம் சுமார் ரூ. 1785 கோடி செலவு மதிப்புள்ள பாதை பால நிர்மான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

---

இந்திய இரயில்வேக்கள், தற்போது பிரதிதினம், மொத்தம் சுமார் 36,00,000 பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன; 1938-39-ம் ஆண்டில் சுமார் 14,50,000 பிரயாணிகளை ஏற்றிச் சென்றன.

# காமராஜ்-சுப்ரமணியம் அச்சு தாசர்புத்தி

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும், மத்திய மானியத்தைக்கொண்டு, புதிதாகத் துவங்கப்பட இருக்கின்ற 14 பொறியியல் கல்லூரிகளில் ஒன்றையாவது சென்னைக்குப் பெற்றுத் தருகிற அறிவோ, ஆற்றலோ அற்றுக்கிடக்கின்ற காமராஜ்—சுப்பிரமணியம் அச்சுக்கு, ஏற்கனவே கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக செவ்வனே இயங்கி, இந்தியத் துணைக்கண்டம் முழுதும் மங்காப் புகழ் பரப்பி, வளர்ந்தோங்கி வரும் கிண்டி பொறியியல் கல்லூரியை இந்திய அரசாங்கத்திடம் அடகு வைப்பதற்கு என்ன அருகதை இருக்கிறது? இவர்களும் அமைச்சர்களாம்! இவர்களுக்கும் 'மதராஸ்' மக்களின் நலத்தில் அக்கரை இருக்கிறதாம்! பீத்திக்கொள்ளுகிறார்கள், கோழைகள்! கொள்கை அற்ற அவலட்சணங்கள்!

கிண்டி பொறியியல் கல்லூரி, இந்தியாவில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் தலைசிறந்து விளங்குவதாகும். சென்னையின் புகழை அது நாடு முழுதும் பரப்பி வந்திருக்கிறது.

அது, ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் துவக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான பொறியியல் நிபுணர்களை நாடு முழுதும் அனுப்பிப் புகழ் பெற்று இருக்கிறது.

1794-ம் ஆண்டில் துவக்கப்பட்ட மதராஸ் சர்வே பள்ளியுடன் தொடர்புகொண்டு, கடந்த 150 ஆண்டுக் காலமாக, மெள்ள மெள்ள, கிண்டி கல்லூரி, இன்றைக்குள்ள மகோன்னத நிலைக்கு வளர்ந்து வந்திருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் மற்றப் பகுதியினர், எதையும் அடகு வைக்காமலே, பொறியியல் கல்லூரிகளை தம் தம் பகுதிகளுக்குப் பெற்று மகிழ இருக்கின்றனர்! ஆனால் காமராஜ்—சுப்பிரமணியம் அச்சோ, சிறந்து விளங்கும் முதல்தரமான கிண்டி பொறியியல் கல்லூரியை மத்திய அரசாங்கத்திடம் அடகு வைத்துவிட்டு, அதற்கு ஈடாகப் பற்றுக்குறை பண உதவி பெற்று, புதிய ஒரு கல்லூரியை நிறுவும் பரிசைப் பெறப் போகிறது!

குட்ட குட்ட குனியும் இந்தக் குணக்கேடர்கள்தான், தமிழ் மக்களிடம் தணியாக் காதல் கொண்டிருப்பவர்களாம்! அவர்கள் உரிமையைக் காப்பதில் வேட்டைகளையும வெட்கச் செய்யக்கூடிய மாவீரர்களாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொறியியல் கல்லூரிகளை நிறுவ இருப்பதுடன், 52 தொழில் நுணுக்கப் பள்ளிக்கூடங்களை நிறுவவும் திட்டமிட்டிருக்கிறது இந்தியப் பேரரசு. அக்கல்லூரிகளில் ஒன்றைக்கூட சென்னைக்குத் தரவேண்டும் எனக் கருதாத இந்தியப் பேரரசு, வேண்டா வெறுப்பாக, ஐந்தே ஐந்துத் தொழில் நுணுக்கப் பள்ளிகளை சென்னைக்கு வழங்க முன்வந்து இருக்கிறது! ஆ! ஆ! என்ன தாராளம்! இந்த நேர்மைத் திறனுக்கு ஒப்புவமைதான் ஏது?

கிண்டி பொறியியல் கல்லூரி மத்திய ஆட்சியின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு விடுமானால், அது வடநாட்டு மாணவர்களின் ஆதிக்கக்கூடமாகிவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தியப் பேரரசின் தத்துப் பிள்ளைகளாக இருந்துவரும், சிந்தி அகதிகள் அங்கே சிரித்து மகிழ்ந்து கொட்டம் அடிப்பர்! அதைத் தமிழ் நாட்டு மாணவர்கள் வியர்க்க வியர்க்க விழி பிதுங்க நோக்கி, கோழி மேய்க்கும் பணிக்குத் திரும்ப வேண்டியதுதான்! காமராஜ்—சுப்ரமணியம் அச்சு, தமிழ்ப் பெருங்குடி மாணவர்களுக்குத் தர இருக்கும் தொழில் வாய்ப்பு இதுதான்! இதுவேதான்!

புதருரு இரு சிறு பட்சிகளுக்காக, கைபுரு ஒரு பெரும் பறவையை இழந்துவிட, காமராஜ்—சுப்ரமணியம அச்சு தீர்மானித்துவிட்டது!

கிடைத்தற்கரிய தங்கத்தைத் தவிட்டுக்கு மாற்றிவிட்டது, அந்த அச்சு!

## தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு ரூ. 90 கோடி

புதுடில்லி, ஏப். 4—

"நாட்டிலுள்ள தாழ்ப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக இந்திய அரசினரால் ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

இத் தொகையில் மாநில சர்க்கார்களினால் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு ரூ. 58 கோடி ஒதுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

# பார்ப்பன சாதி வெறிக்கு சம்மட்டி அடி!

## 'ஆலயத்தில் வழிபடும் உரிமை அனைவருக்கும் பொது'

## 'பார்ப்பனருக்கு மட்டுமே என பாத்தியதை பேசுவது சட்டவிரோதம்'

## 'இந்துக்கள் எவரும் வழிபடலாம்'

வரகூர் வைதீகர்கள் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

ஆலயம் ஒன்று! அது தங்களுக்கே சொந்தமென்றும், அங்கே எழுந்தருளியிருக்கும் 'ஆண்டவனை'த் தரிசிக்கத் தங்களுக்கு மட்டுமே உரிமை உண்டென்றும், அந்த ஏகபோக உரிமையில், பார்ப்பனரல்லாதார் எவரும் குறுக்கிடக்கூடாது என்றும், பார்ப்பன குலப் பெரிய மனிதர்கள் சிலர் வாதிட்டிருக்கின்றனர்—நாம் வாழும் இந்த நாட்களில்!

'தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வரகூர் கிராமத்தில் உள்ள வெங்கடேசப் பெருமாள் கோவிலில் வழிபடும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு; இதரர் அந்தக் கோவிலில் வழிபடக்கூடாது'

என்று கோரி, அந்தக் கிராம பார்ப்பனர்கள் சார்பில், திருவையாறு மாவட்ட நீதிபதி முன்னிலையில், இராமாமிர்தம் அய்யர், சுவாமிநாத அய்யர் என்ற இருவரும், ஊரில் உள்ள பார்ப்பனரல்லாதார் கோவில் நிர்வாகிகள் ஆகியோருக்கு எதிராக வழக்கு ஒன்று தொடுத்திருக்கின்றனர்.

'பார்ப்பனர்களுக்கே அந்தக் கோவில் உரியது; வேறெவரும் அங்கு வழிபாடு நடத்தக்கூடாது,' என்று உத்தரவிடுமாறு அந்தப் பார்ப்பனக் குலக் கொழுந்துகள் கோரினவாம்.

வழக்கை மாவட்ட நீதிபதி கே. சத்தியேந்திரன் ஏற்றுக் கொண்டு விசாரணை நடத்தினார்

'ஆலய நுழைவுச் சட்டம் இந்தக் குறிப்பிட்ட ஆலயத்திற்கும் பொருந்துமா?' என்று, உயர்நீதி மன்றத்திடம் விளக்கம் கோரப்பட்டிருக்கிறது.

உயர் நீதி மன்ற நீதிபதிகள் கோவிந்தமேனன், இராமசாமி கவுண்டர் இருவரும் 'பொருந்தும்' என, கருத்தறிவித்தனர்.

அதன்பேரில், நீதிபதி சத்தியேந்திரன், "வரகூர் ஆலயம் பார்ப்பனர்களுக்கு மட்டும் உரியது அல்ல; அது பொது சொத்து; அங்கு இந்துக்களான எவரும் சென்று வழிபடலாம்; வழிபடும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டும் இருக்க வேண்டும் என்பது சட்ட விரோதமானதாகும்,"

என்று, தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

தீர்ப்பையறிந்து தேள் கொட்டியது போலத் துடித்த பார்ப்பனர்களின் முன்னிலையில், இதர பார்ப்பனரல்லாதார், அந்த ஆலயத்திற்குச் சென்று வெங்கடேசப் பெருமாளை வழிபட்டனராம்.

ஊரில், பார்ப்பனர்கள் கேலி செய்யப்படுவதால், தொங்கிய முகத்தோடு, வெளியில் தலைகாட்டவும் வெட்கப்படுபவர்களாயிருக்கின்றனராம்.

## பொதுநல சேவை செய்தவர்களுக்கு உதவி

இன்னலுறும் அரசியல் தியாகிகளுக்கு உதவுவதற்கு, இந்தியப் பேரரசினர், உள்நாட்டிலாகா அமைச்சர் தம் சமய சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செலவிட ஆண்டொன்றுக்கு ரூ. 3 இலட்சம் அவர் பாதுகாப்பிலேயே ஒதுக்கி வைத்துள்ளனராம்!

அரசாங்க நிதியிலிருந்து அரசியல் தியாகிகளுக்கு எவ்வித நிதி உதவியும் வழங்கப்படக்கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டாலும், பின்னர், தகுதிவாய்ந்த சிலர் பிரச்சினையில் உதவி அளிப்பதற்கேற்ப அம்முடிவில் சிறுமாறுதல் செய்யப்பட்டுள்ளதாம். அரசியல் தியாகிகளுக்கு மட்டுமின்றி அரசியல், சமூக, பொதுநல சேவை செய்து இன்னலில் உழல்வோருக்கும் இவ்வுதவி கிடைக்குமாம்.

## மக்கள் சபையைவிட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'இப்படி ஓயாது, ஒழியாது உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி சபையின் நடவடிக்கைகளை நடத்துவது?' என்று கேட்டிருக்கிறார்.

வழக்கமாக அமைதி கொணர, ஒரு நிமிட நேரம் சப்தம் செய்யாதிருக்குமாறு கோருவாராம் தலைவர்! ஆனால், இன்று அந்த முறை பலன் தராதுபோகவே, 'பேசுங்கள், பேசுங்கள்; எப்போதுதான் பேசி முடித்து பேச்சை நிறுத்துகிறீர்கள் பார்க்கலாம்!' என்று கோபமாகக் கூறினாராம்! உறுப்பினர்கள் — பிள்ளைகளாகவும், சபை—வகுப்பு அறையாகவும், தலைவர்—ஆசிரியராகவும் இருந்தாலாவது, பேசுவோரை பெஞ்சுமேல் ஏறச் செய்யலாம்; பிரம்படி தரலாம்; ஆனால் மக்கள் சபை ஆயிற்றே! நாட்டு மக்களுக்கான சட்டங்கள் இயற்றும் மாமன்றம் ஆயிற்றே! எப்படி முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.